# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 ஒக்டோபர் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

- **I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்
- **II.** வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை
- **III.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்
- **IV.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- **V.** மனுக்கள்
- **VI.** கேள்விகள் / இடைக்கால கேள்விகள்

**01.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம்** 2018.09.18 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/54)**

அ. ஒரு வருடமாக பயணத்திலிருந்து அகற்றப்பட்ட பஸ் வண்டிகளுக்குரிய வீதி அனுமதிப் பத்திரங்களை மீண்டும் போக்குவரத்து அதிகார சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. 2017 ஆம் ஆண்டு மற்றும் இவ் வருடத்தினுள் இதுவரை அவ்வாறு இனங்காணப்பட்ட எத்தனை பஸ் வண்டிகள் காணப்படுகின்றன என்பதனை சபைக்கு முன்வைப்பீர்களா ?

இ. மேலே குறிப்பிட்டவற்றில் இனங்காணப்பட்ட அளவினை வீதிகளுக்கு இணங்க வகைப்படுத்தும் ஆவணத்தின் மூலம் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

ஈ. அவ்வாறு இனங்காணப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்காக கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் யாவை?

உ. அந்த நடவடிக்கை ஒழுங்கு விதிகளுக்கு புறம்பாக வீதி அனுமதிப் பத்திரங்கள் விற்கப்பட்டிருந்தால் அது தொடர்பாக விசாரணை ஒன்றினை மேற்கொள்வீர்களா ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம்** 2018.09.18 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/56)**

அ. அத்தனகல்ல பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தின் "கத்தொட காணி" என்ற பெயர் கொண்ட 4 ½ ஏக்கர் பூமிப் பிரதேசத்தை துண்டுகளாக்கி விற்பதற்காக 2012.04.11 ஆந் திகதி வரைபட இலக்கம் 6473G/2012 அங்கீகரிப்பதற்காக அப்போதைய அத்தனகல்ல பிரதேச சபையின் தவிசாளரினால் 8 நிபந்தனைகளைத் தெரிவித்து அந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரம் உரியவர்களுக்கு காணிகளைத் துண்டுகளாக்குவதற்கு அங்கீகாரத்தினை வழங்க முடியும் என எழுத்து மூலமாக அவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அக் காணி இவ்வேளையில் உரிய நிபந்தனை ஒன்று இல்லாது துண்டுகளாக விற்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

இ. உரிய காணியினை துண்டாக்கி விற்பதற்காக எதன் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு அத்தனகல்ல பிரதேச சபையின் தவிசாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. எந்தவொரு நிபந்தனை ஒன்றினையும் நிறைவேற்றாது அக் காணியினைத் துண்டுகளாக்கி விற்றது தொடர்பாக உரிய தவிசாளருக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.09.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)18/57)**

அ. மேல் மாகாணத்தின் வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் கொழும்பு 01 காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தர் பயணம் திரு. பி.என்.எஸ். கருணாசந்திர அவர்களின் செயற்பாடு தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் கணக்காய்வுப் பிரிவினால் 2018.08.07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாக வழங்கிய சிபாரிசினை நடைமுறைப்படுத்த எவ்வளவு காலம் எடுக்கும் என்பதனை நீங்கள் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. இவ் அதிகாரிக்கு எதிராக கணக்காய்வுப் பிரிவினால் வழங்கிய 08 சிபாரிசுகள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதை சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அவ்வாறு அவ் உத்தியோகத்தரின் நடவடிக்கை தொடர்பாக அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.09.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)18/58)**

அ. மேல் மாகாண சபையின் வீதிப் போக்குவரத்து அதிகார சபைக்கு முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்க 2012.05.01 ஆந் திகதி தொடக்கம் இதுவரை எவ்வளவு பணியாட்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அச் சுற்றறிக்கைக்கு புறம்பாக எவ்வளவு எண்ணிக்கையான பணியாட்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அச் சுற்றறிக்கைக்கு புறம்பாக ஆட்சேர்க்கப்பட்ட பணியாட்களுக்காக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அச் சுற்றறிக்கைக்கு புறம்பாக பணியாட்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுத்தவர்களுக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.09.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)18/59)**

அ. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபனங்களுக்காக காபட் இடும் இயந்திரங்கள் கடந்த காலத்தினுள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அந்த இயந்திரங்கள் வழங்கப்பட்ட உள்ளூராட்சித் தாபனங்கள் யாவை ?

இ. அதற்காக செலவாகிய மொத்த நிதி எவ்வளவு ?

ஈ. அந் நிதியானது ஏதாவது அமைச்சின் நிதியத்தின் மூலமா செலவு செய்யப்பட்டது என்பதனை இக் கௌரவ சபைக்கு தெளிவுபடுத்துவீர்களா ?

உ. கடுவெல மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள இந்த இயந்திரங்களின் தற்போதைய நிலைமை யாது ?

ஊ. இச் சிறப்பற்ற செயற்றிட்டத்தின் ஊடாக ஒழுங்கற்ற நிதிப் பாவனை நிகழ்ந்துள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

**06.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/62)**

அ. உங்கள் அமைச்சின் மூலம் விவசாய கழகங்களுக்கு வழங்கிய கை உழவு இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அவ் விவசாய கழகங்களின் பெயர்கள் என்ன ?

இ. இவ் உபகரணங்களை வழங்க செலவாகிய மொத்த நிதி எவ்வளவு ?

ஈ. ஒரு விவசாய கழகங்களுக்காக இவ் உபகரணங்களை வழங்க செலவாகிய நிதி எவ்வளவு ?

உ. இவ் உபகரணங்களை கொள்வனவு செய்த தாபனம் எது ?

ஊ. விலை மனுக்களுக்காக பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததா ?

எ. இத் தாபனங்களின் பெயர் என்ன ?

ஏ. இத் தாபனங்கள் முன்வைத்த விலை மனு யாது ?

ஐ. இந்த கை உழவு இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக தொழிநுட்பக் குழு சிபாரிசு செய்ததா ?

ஒ. அந்தக் குழு யாது ?

**07.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/63)**

அ. மாகாண கல்வித் திணைக்களம் கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் இருந்து ரன்மகபாயவிற்கு கொண்டு வர காரணமாகிய விடயங்கள் யாவை ?

ஆ. மாகாண கல்வித் திணைக்களம் இயங்கிய கிரீன்பாத் என்ற இடத்தில் அமைந்திருந்த கட்டடத்தின் உரிமை எவரின் கீழ் காணப்படுகின்றது ?

இ. ரன்மகபாயவில் மாகாண கல்வித் திணைக்களத்தை இயங்கச் செய்ய வாடகை செலுத்தப்படுகின்றதா ? அப்படியாயின் அதற்காக செலவாகும் நிதி எவ்வளவு ?

ஈ. தற்போது மூடப்பட்டுள்ள கிரீன்பாத் கல்வித் திணைக்களம் இயங்கிய இடம் எத் தேவைக்காக பயன்படுத்தப்படவுள்ளது ?

**08.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/64)**

அ. நீர்கொழும்பு நகர சபையின் அதிகார பிரதேசத்தின் கொச்சிக்கடையில் அமைந்துள்ள நாளாந்தம் சந்தை இயங்கும் கட்டடத்தின் பகுதி ஒன்று அவசரமாக உடைத்து அகற்றப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதன் காரணமாக நாளாந்தம் வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களின் ஒரு பகுதியினர் பாரிய கஷ்டத்திற்கு மத்தியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட வேண்டியுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இந்த நாளாந்தம் சந்தை இயங்கிய கட்டடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு ஏதாவது தாபனம் ஒன்று நிதியினை ஒதுக்கியுள்ளதா ? அப்படியாயின்

i. ஒதுக்கிய நிதி எவ்வளவு ?
ii. கட்டடத்தின் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதா ?
iii. அவ்வாறான நிர்மாணம் ஒன்று செய்வதாயின் அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

ஈ. மேற் கூறிய நாளாந்த சந்தை இயங்கிய கட்டடத்தை உடைப்பதற்கு சபை கூட்டம் ஒன்றில் நகர சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதா ?

உ. மேற்குறிப்பிட்ட படி பொறுப்புள்ள தாபனம் ஒன்று மேற்கூறிய கட்டடத்தை உடைக்க அங்கீகாரம் வழங்கவில்லையாயின் அக் கட்டடம் எவரின் தேவைக்காக உடைத்து அகற்றப்பட்டது ?

ஊ. இக் கட்டடத்தை உடைத்து அகற்றியதனால் மக்களுக்கும், நாளாந்தம் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கும் நிகழ்ந்துள்ள கஷ்டத்தினைத் தடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ உபாலி கொடிகார அவர்கள்**

மேல் மாகாணத்தின் கல்வி வலய மட்டத்தில் அமைந்துள்ள விஷேட தேவையுள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 182 ஆகுவதுடன், அப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விஷேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 3713 ஆகும்.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் சாதாரண பிள்ளைகளுக்கு ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையின் பெறுபேற்றின் கீழ் புலமைப் பரிசில் உதவி நிதி ஒன்று, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல புலமைப்பரிசில் மூலம் புலமைப் பரிசில் நிதி ஒன்று வழங்கும் முறை ஒன்று காணப்பட்ட போதும் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவி ஒன்றினை பெற்றுக் கொடுக்கும் முறை ஒன்று இல்லை.

மேல் மாகாணத்தின் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக, கல்வியினை பெற்றுக் கொடுக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக அப் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ஏதாவது படி ஒன்று அல்லது உதவி நிதி ஒன்றினை வழங்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/05)**

**02. கௌரவ யசபால கோறலகே - பிரதித் தவிசாளர் அவர்கள்**

இன்று காணப்படும் கல்வி கொள்கையினால் பாரிய அளவு கஷ்டத்திற்கு மக்கள் உட்பட்டுள்ளனர் என்பதனைக் குறிப்பிட வேண்டும். பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது வகுப்பொன்றில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையை 45 இருந்து 35 வரை முறையே குறைக்கும் நடவடிக்கை ஒன்று காணப்படுகின்றது தற்போது வகுப்பொன்றின் பிள்ளைகளின் எண்ணிக்கை 7 இனால் குறைந்துள்ளது. அதற்குப் பதிலாக பாடசாலைகளில் ஒரு வகுப்பொன்றினை புதிதாக ஏற்படுத்தாமையானது சமூகத்தில் பாரிய அளவு பிரச்சினை ஏற்பட காரணமாகி உள்ளது என்பதனை கல்வி அதிகாரிகளும் அறியவில்லை இது தொடர்பாக கவனத்தைச் செலுத்தி இம் முறையின் மூலம் பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்புக்களிலும் குறையும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற முறையில் புதிய வகுப்பு ஒன்றினை ஒவ்வொரு பிரிவிலும் ஆரம்பிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/06)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.09.19** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,

பத்தரமுல்ல.